# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 560/2023

Prosecution Witness 4

| | | | |
|---|---|---|---|
| Name | : வரதராஜன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.சௌண்டப்பன் | Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of February 2026.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது பொள்ளாச்சி நகர கிழக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு நிலையத்தில் தலைமைக்காவலர் சரவணன் மற்றும் உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் பணிபுரிந்து வந்தார்கள். அவர்களுடைய கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சியம். ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன்.

2. கடந்த 25.06.2023 அன்று அசா 1 கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 227/2023, இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் சட்டப்பிரிவு 4 of TNPHW Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மக%ர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டது. சாட்சிகள் விசார்ணை செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

3. காயம்பட்ட நபருக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் பிரவீன்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூறிய காயச்சான்று பெறப்பட்டது. எதிரிகள் இருவரும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றதில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்யவில்லை. வழக்கு விசாரணை முடித்து எதிரிகளுககு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ( முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், வரைபடம், காய்சசான்றுடன் கூடிய விபத்து பதிவேடு **அசாஆ 3 முதல் அசாஆ 7** ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது),

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கிற்காக அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J. Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.